இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 309 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 05 – வியாழக்கிழமை 19 ஜூன் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள்    Established : 10.8.1942 - Volume : 83 - Issue 309 : Thiruvalluvar Year - 2056 - Aani 05 - Thursday 19 June 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## கீழடி அகழாய்வு : தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து

# மதுரையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுபடி கழக மாணவர் அணி சார்பில் நடைபெற்றது!

**சென்னை, ஜூன் 19 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, ‘அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் நேற்று காலை “மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை”யில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது.**

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி சிவா கண்டன முழக்கமிட்டார். மாணவரணி செயலாளர் இராஜிவ் காந்தி வரவேற்று பேசினார். பல்லாயிரவர் பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

கீழடி ஆய்வை மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம் தெரிவித்து 1.6.2025 அன்று மதுரையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக பொதுக்குழுவில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்மொழி – தமிழ்ப் பண்பாடு ஆகியவை காலத்தால் முந்தையவை என்பதை அகழாய்வுகளும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகின்றன. 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தாதிலிருந்து இரும்புப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிற வரலாற்று உண்மை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகள் மூலமாக நிறுவப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு ஆதாரப்பூர்வமாக வெளியிட்டும்கூட, அதற்கு இந்தியப் பிரதமரோ, இந்திய தொல்லியல்துறையோ வாழ்த்துகூட தெரிவிக்கவில்லை.

இந்தப் பொதுக்குழு நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதற்கான தரவுகள் கிடைக்கப்பெற்று அவை உலகளாவிய ஆய்வு நிலையங்கள் மூலமாகவும் நிறுவப்பட்டிருப்பதைத் தொல்லியல் துறை சார்பில் அதன் அதிகாரியாக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்து ஆண்டுகளாகியும் அதனை ஏற்காமல், திருத்தங்கள் தேவை என ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தெரிவித்திருப்பது, தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாட்டின் மீதும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குள்ள வன்மத்தையே காட்டுகிறது.

தங்களின் பொய்யான - கற்பனையான சமஸ்கிருத-சரஸ்வதி ஆற்று நாகரிகத்தை, தமிழர்களின் வைகை ஆற்று - கீழடி ஆய்வுகள் உண்மைத்தரவுகளுடன் மிஞ்சிவிட்டன என்ற காழ்ப்புணர்விலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளிவந்து, கீழடி ஆய்வறிக்கையை ஏற்று, இந்தியாவின் பெருமைமிகு நாகரிகமாகத் தமிழரின் நாகரிகத்தை அறிவிக்க வேண்டும் என இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

கீழடி தமிழரின் தாய்மடி! பரந்துபட்ட பார்வையோடு - அறிவியல் பூர்வமாக எங்களது தொன்மையை நிறுவுகிறோம். இதில் ஆணவ – ஆதிக்க அரசியல் செய்ய நினைத்தால், அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அரசை இப்பொதுக்குழு எச்சரிக்கிறது!

இவ்வாறு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து, பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வருகிற 18ஆம் தேதி புதனன்று தி.மு.க. மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி;

அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து நேற்று (18.6.2025) காலை 10 மணி அளவில் தி.மு.க. மாணவர் அணி சார்பில், “மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை” யில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள், அவர்களது தோழர்கள் மற்றும் பொதுமக்கள், தமிழ் இன ஆர்வலர்கள், மாணவர்கள் என்று பல்லாயிரவர் பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வின் இரண்டாம் கட்டமாக, பரமத்திவேலூர், கவுண்டம்பாளையம் மற்றும் பரமக்குடி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார்.

## ‘உடன்பிறப்பே வா’ கழக நிர்வாகிகளுடன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார்!

சென்னை, ஜூன் 19 -

“உடன்பிறப்பே வா” எனும் தலைப்பில், தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரடியாக ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

கட்சியின் ஆக்கப்பணிகள் மற்றும் தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து ‘உடன்பிறப்பே வா’ எனும் தலைப்பில் தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளுடன், கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 13ம் தேதி ஆலோசனை கூட்டத்தை தொடங்கினார். இந்நிலையில், நேற்று முன்தினம் கலந்தாலோசனைக் கூட்டத்தில் பரமத்தி வேலூர், கவுண்டம்பாளையம், பரமக்குடி ஆகிய 3 தொகுதிகளின் நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். தொகுதி வாரியாக ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர், பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோருடன் கலந்தாலோசனை நடத்தி வருகிறார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கான வளர்ச்சியைச் சாத்தியப்படுத்தியுள்ள நமது திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடவும் தமிழ்நாட்டை வீழ்த்தத் துடிக்கும் வீணர்களுக்குத் தோல்வியைப் பரிசளித்து விரட்டிடவும் வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப்பணியாற்றிட உடன்பிறப்பே வா! என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கத் திட்டமிடும் பகைக் கூட்டத்தை மக்களின் துணை கொண்டு வீழ்த்திடு வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்துள்ளார்.

## சிவகங்கை மாவட்டம் – திருப்புவனம் வட்டத்தில்

# ரூ.40.27 கோடியில் தடுப்பணை கட்டும் பணி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**சிவகங்கை, ஜூன் 19 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.6.2025) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் ரூ. 40.27 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

வைகை ஆறானது தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியமான குடிநீர் மற்றும் பாசன ஆதாரமாக விளங்குகிறது. வைகை ஆற்றின் மூலமாக மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் வைகை ஆற்றிலிருந்து பிரியும் 128 கால்வாய்கள் மூலமாக 374 கண்மாய்களைச் சேர்ந்த 1,36,109 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகில் வைகை ஆற்றின் வலதுபுறம் பிரியும் பழையனூர் கால்வாய் மற்றும் அதே இடத்தில் இடதுபுறம் பிரியும் கானூர் கால்வாய் முதலியவை மிக முக்கியமான கால்வாய்களாகும். தற்சமயம் வைகை ஆற்றின் படுக்கை மட்டம் மண் அரிமானம் காரணமாக சுமார் 1.20 மீ ஆழம் அளவிற்கு மேல் தாழ்ந்து போய்விட்டதால், வைகை ஆற்றில் செல்லும் நீர் கானூர், பழையனூர் கால்வாய்களில் நீர் ஏறிச்செல்ல இயலாத நிலை உள்ளது. இதனால் மேற்காணும் கண்மாய்களின் பாசன ஆதாரம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 22.1.2025 அன்று கானூர், பழையனூர் கால்வாய் பாசனம் மூலமாக வேளாண் நிலங்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே 40.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இதன் பயனாக கானூர், பழையனூர் மற்றும் 17 கண்மாய்களின் மொத்த பாசன பரப்பான 6975.53 ஏக்கர் நிலங்களுக்கு வைகை ஆற்று பாசன நீர் ஆதாரம் உறுதி செய்யப்படுவதுடன், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று கானூரில் தடுப்பணை கட்டும் பணியில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த புகைப்படங்களை பார்வையிட்டு, நீர் வளத்துறை அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து தடுப்பணை கட்டும் பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைவாக முடித்து விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், நீர் வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் ஆர்.தங்கராஜ், செயற்பொறியாளர் எஸ்.ரமேஷ் உள்பட விவசாயப் பெருமக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.6.2025) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் 40.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், நீர் வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் ஆர்.தங்கராஜ், செயற்பொறியாளர் எஸ்.ரமேஷ் உள்பட விவசாயப் பெருமக்கள் உடனிருந்தனர்.